# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசரக்கூட்டம் 2019–ம் வருடம் நவம்பர் மாதம் 12.11.2019 –ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது அக்கூட்ட நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு.

அக் கூட்டத்தில் கலந்து கொண்டவர் – திரு. எம். சுப்ரமணியபிரபு,
ஆணையாளர்(பொ) (ம) தனி அலுவலர்

## பொருட்கள்

1) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் 09-11-2019-ம் நாளைய தொலைபேசி செய்தியில் பத்மனாபபுரம் நகராட்சி பகுதியில் இயற்கை இடர்பாடுகள் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்துள்ள சாலைகளை ரூ.194.00 இலட்சம் மதிப்பீட்டில், சீரமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பத்மனாபபுரம் நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழையினால் சேதமடைந்துள்ள கீழ்காணும் சாலைகளை சீரமைக்க கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பத்மனாபபுரம் தெற்கு தெரு , பத்மனாபபுரம் மேற்குத்தெரு, பத்மனாபபுரம் கிழக்குதெரு மற்றும் பத்மனாபபுரம் வடக்கு தெரு, புலியூர்குறிச்சி மெயின்ரோடு, ஆசான்கிணறு சாலை, மார்க்கெட் சாலை, சந்தை வழி பிரதான மற்றும் குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் தார்ச்சாலைகள் (BT ROAD) அமைத்தல் மற்றும் ஞானியார் தெருவிற்கு அலங்கார கற்கள் (PAVER BLOCK) பதித்தல் | 194.00 |

மேற்காணும் சாலைகளை சீரமைக்க நிர்வாக அனுமதி பெற மதிப்பீட்டுப்பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1628 /2019/இ1

**மன்றத் தீர்மானம் எண்.1559,நாள்.12.11.2019.**

அனுமதி வழஙகப்படுகிறது.

2) இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண் TN74 W 0436 க்கு தகுதி சான்று புதுப்பித்துக் கொள்வதற்கான மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.100000/-(One Lakh Only) க்கும் மற்றும் 2019-2020-ம் ஆண்டிடுக்கான வாகன விபத்து காப்பீட்டு பிரீமியம் செலுத்த உத்தேச தொகை ரூ.10000/- யுனைட்டெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி நிறுவனத்திற்கு காசோலையாக வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றத் தீர்மானம் எண்.1560,நாள்.12.11.2019.**

அனுமதி வழஙகப்படுகிறது.

ஒப்பம்./—
தனி அலுவலர் (ம) ஆணையாளர் (பொ)
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்(பொ),
பத்மனாபபுரம் நகராட்சி.